

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், லெம்பலக்குடி ஊராட்சி, கப்பதான்பட்டியில், புதிய சமுதாயக்கூடம் கட்டிடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நேற்று முன்தினம் (05.01.2025) திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி வார்டு 7 பி.பெ.அக்ரஹாரம் பகுதியில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் மனிஷ், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### முதல்வர் அறிவுரையேற்று – அனைத்து மருத்துவ காலிப் பணியிடங்களையும் விரைந்து நிரப்பிட கழக அரசு முனைப்பான நடவடிக்கை!

# பெரம்பலூர் உள்பட - தமிழ்நாட்டில் விரைவில் 3 புதிய மருத்துவக் கல்லூரிகள்!

### கொளக்காநத்தம் நிகழ்ச்சியில் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, ஜன.7-

**முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெரம்பலூர் மாவட்டம், கொளக்காநத்தம் பகுதியில் ரூ.50 இலட்சம் செலவில் புதிய வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.**

**அப்போது அவர் பேசுகையில், “ஒன்றிய அரசை வலியுறுத்தி விரைவில் தமிழ்நாட்டில் பெரம்பலூர் உள்பட 3 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்” என்று அறிவித்தார்.**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் நேற்று முன்தினம் (05.01.2025) பெரம்பலூர் மாவட்டம், கொளக்காநத்தம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதார அலகு புதிய கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

பெரம்பலூர் மாவட்டம், கொளக்காநத்தம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் 300 இடங்களில் பொது சுகாதார அலகு கட்டிடம் கட்டும் பணிகள் கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதுவரை 150 இடங்களில் பொது சுகாதார அலகு கட்டிடம் தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டு உள்ளது. பொது சுகாதார அலகு கட்டிடத்தைப் பொறுத்தவரை 67 வகையான மருத்துவப் பரிசோதனைகள் செய்துக் கொள்ள ஆய்வகம் திறந்து



வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வகத்தைப் பொறுத்தவரை இப்பகுதி மக்களின் மருத்துவப் பரிசோதனைகளான காசநோய், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு நோய் பாதிப்புகளுக்கு பரிசோதனைகள் செய்வதற்குரிய பயனுள்ளதாக அமையும். இதுவரை 150 பொது சுகாதார அலகு கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதில் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள கொளக்காநத்தம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்திற்கு சிறப்பு ஒன்று அமைந்துள்ளது. காரணம் இப்பகுதி ஒன்றியக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி அவர்சார்ந்த ஊராட்சி நிதி ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு தந்து இம்மருத்துவமனைக்கு பல்வேறு வசதிகளை செய்து தந்திருக்கிறார்கள். ஏறத்தாழ ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டிடம் இன்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோல் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர் காலிப்பணியிடங்களை நிரப்பிட கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்வரும் 2026ஆம் ஆண்டிற்குள் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களையும் சேர்த்து 2553 மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும் என்று இத்துறைக்கு அறிவுறுத்தி அந்தவகையில் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் இன்று (05.01.2025) தேர்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதிலும் 156 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு தேர்வு நடைபெற்று வருகிறது. மருத்துவர் பணியிடத்திற்கு 23,917 பேர் விண்ணப்பத்திருக்கிறார்கள். தேர்வில் வெற்றி பெரும் தகுதியான மருத்துவர்களுக்கு விரைவில் பணிநியமனம் வழங்கப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவர்கள் மொத்த பணியிடம் 86, தற்போது பணிபுரியும் மருத்துவர்கள் 54, எனவே காலியிடமாக உள்ள 32 மருத்துவர் பணியிடங்களும் விரைவில் நிரப்பப் படும்.

**இதயம் காப்போம் திட்டம்**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாட்டில் பல்வேறு சிறப்புக்குரிய திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மருத்து வத்துறையின் மகத்தான திட்டங்களில் ஒன்றான இதயம் காப்போம் திட்டம் மிக பயனுள்ளதாக அமைந்துள்ளது. 2023 ஜீன் திங்கள் 07 ஆம் தேதி கோவை மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் தொடங்கப்பட்ட இத்திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் என 10,000த்திற்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் Loading Doses என்று சொல்லக்கூடிய இருதய பாதுகாப்பு மருந்துகள் கையிருப்பில் வைக்கப்பட்டு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதுவரை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் இருதயம் காப்போம் திட்டத்தின் மூலம் 13,673 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் காப்பற்றப்பட்டிருக்கிறார்கள். பெரம்பலூர் மாவட்டத்தில் மட்டும் 289 பேர் இத்திட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள். கொளக்காநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மட்டும் 23 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். மேலும் பெரம்பலூர் மாவட்டத்தில் இன்னொரு கூடுதல் சிறப்பாக கீழப்புலியூர் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. மிக விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் மற்றொரு கோரிக்கை ஒரு மருத்துவக்கல்லூரி வேண்டும் என்பது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக்கல்லூரி அமைய நடவடிக்கை எடுத்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் இன்னும் புதிய 6 மருத்துவக்கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் பலமுறை கோரிக்கைகள் வைக்கப்பட்டது. தற்போது 3 மருத்துவக்கல்லூரிகளாவது அமைப்பதற்கு கோரிக்கை வைத்திருக்கிறோம். விரைவில் ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அவர்களை சந்தித்து 3 புதிய மருத்துவக்கல்லூரி அமைய கோரிக்கை வைக்க உள்ளோம். அதில் ஒன்று பெரம்பலூர் மாவட்டம் ஆகும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலுவலர் வடிவேல் பிரபு, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கீதா, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.மகாலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

# கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்தநாள்!

### கழகத்தினர் ஏராளமானோர் நேரில் சந்தித்து வாழ்த்து!

சென்னை, ஜன. 7-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (5.1.2025 - ஞாயிற்றுக்கிழமை) சென்னை மெரினா கடற்கரையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோர் நினைவிடங்களுக்கு நேரில் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து சி.ஐ.டி.காலனி இல்லத்தில் திரளான கழகத் தொண்டர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களை சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மேலும், அமைச்சர் பெருமக்கள் ஐ.பெரியசாமி, கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, கீதாஜீவன், பி.கே.சேகர் பாபு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், டி.ஆர்.பி. ராஜா, அனிதா இராதாகிருஷ்ணன், இராணிப்பேட்டை காந்தி, தி.மு.க. பொருளாளரும், மக்களவை தலைவருமான டி.ஆர்.பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மக்களவை உறுப்பினர்கள் தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, செல்வம், அருண் நேரு, திருமதி. ராணி ஸ்ரீ குமார், முரசொலி, மாநிலங்களை உறுப்பினரும், தொ.மு.ச. தலைவருமான சண்முகம், மாநிலங்களவை உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், அப்துல்லா, கனிமொழி சோமு, கிரிராஜன்,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் துறைமுகம் காஜா, துணை அமைப்பு செயலாளர் எஸ்.ஆஸ்டின், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர்கள் மனோ தங்கராஜ், மயிலை த.வேலு, மோகன், பரந்தாமன், எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்கண்டேயன், கோ.தளபதி, ராஜா, தாயகம் கவி, வெற்றியழகன், தமிழரசி, எழிலன், அமலு, திருப்பூர் செல்வராஜ், ஊர்வசி அமிர்தராஜ், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ், மாவட்டக் கழகச் செயலாளர்கள் நே.சிற்றரசு, ஜெயபாலன், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் இளைய அருணா மற்றும் பலர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் மாநிலம் முழுவதும் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி ஆதரவற்றோர் மற்றும் முதியோர்களுக்கு புத்தாடைகள், அறுசுவை உணவு மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

### இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு

# முதல்வரின் குரலை உரக்கச் சொல்லுவோம்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜன. 7-

சிந்துவெளி எழுத்துக்கள் தொடர்பான புதிருக்கு விடை கண்டறியப்படும் போது, இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றை, தமிழை தவிர்த்து விட்டு இனி எழுத முடியாது என்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குரலை உரக்கச் சொல்லுவோம் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

தினகரன் தலையங்கம் வருமாறு:-

சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டது இந்திய வரலாற்றையே மாற்றிப் போட்டது. 1924ம் ஆண்டு செப்டம்பர் 20ம் தேதி சிந்து சமவெளி நாகரிகத்தை கண்டு பிடித்து அறிவித்தார் ஜான் மார்ஷல். சுமேரிய நாகரிகத்தோடு இருந்த சில ஒற்றுமைகள் காரணமாக, இதன் காலகட்டம் சுமார் 4,500 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று முடிவானது. சிந்து சமவெளி (ஹரப்பா) நாகரிகத்தின் அழிவிற்கு சில நூற்றாண்டுகளுக்குப் பிறகே, ஆரியர் வருகை நிகழ்ந்தது என்கிறார் பிரபல வரலாற்று ஆய்வாளர் தேவ்தத் பட்நாயக்.

சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் டிஎன்ஏ ஆதாரங்களின்படி, 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கங்கை நதி சமவெளியிலிருந்து தென் பகுதி வரை பரவி வாழ்ந்தனர். இவர்களில் சிலர் தொல்



தினகரன்
ஜனவரி 6, 2025 திங்கட்கிழமை
ஒரு மில்லியன் டாலர் பரிசு
சிந்து சமவெளி நாகரிம் கண்டுபிடிக்கப்பட்டது இந்திய வரலாற்றையே மாற்றிப் போட்டது. 1924ம் ஆண்டு செப்டம்பர் 20ம் தேதி சிந்து சமவெளி நாகரிகத்தை கண்டுபிடித்து அறிவித்தார் ஜான் மார்ஷல். சுமேரிய நாகரிகத்தோடு இருந்த சில ஒற்றுமைகள் காரணமாக, இதன் காலகட்டம் சுமார் 4,500 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று முடிவானது. சிந்து சமவெளி (ஹரப்பா) நாகரிகத்தின் அழிவிற்கு சில நூற்றாண்டுகளுக்குப் பிறகே, ஆரியர் வருகை நிகழ்ந்தது என்கிறார் பிரபல வரலாற்று ஆய்வாளர் தேவ்தத் பட்நாயக்.
சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் டிஎன்ஏ ஆதாரங்களின்படி, 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கங்கை நதி சமவெளியிலிருந்து தென்பகுதி வரை பரவி வாழ்ந்தனர். இவர்களில் சிலர் தொல் திராவிட மொழியைப் பேசியிருக்கலாம். ராக்கிடி

திராவிட மொழியைப் பேசியிருக்கலாம். ராக்கிடி என்ற பகுதியில் சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த பெண்ணின் உடலில் இருந்து கிடைத்த டிஎன்ஏ, தமிழ்நாட்டின் இருளர் பழங்குடியைச் சேர்ந்தவர்களின் டி.என்.ஏ.வுடன் ஒத்துப் போகிறது. இதிலிருந்து தொல் திராவிடகுடியும் சிந்துவெளி மக்களும் இணைந்து வாழ்ந்ததை உணர முடிகிறது.

சிந்துவெளி நாகரிகம் ஆரியத்துக்கு முற்பட்டது, அங்கு பேசப்பட்டது திராவிட மொழியாக இருக்கலாம் என்று ஜான் மார்ஷல் நூறாண்டுகளுக்கு முன்பு சொன்ன குரல் இன்றைக்கு வலுப்பெற்றிருக்கிறது. சிந்துவெளி பற்றி ஜான் மார்ஷல் தன் கண்டுபிடிப்பை வெளியிட்டதும், பெரியார் தன் விடுதலை நாளிதழில் அதை பற்றி கட்டுரைகள் வெளியிட்டிருந்தார். அண்ணாவும் 1948ம் ஆண்டிலேயே சிந்துவெளி நாகரிகத்தின் அடையாளங்களை வெளிக்கொணர்ந்த சர் ஜான் மார்ஷல் சாதனைகளை பாராட்டி எழுதியிருக்கிறார்.

கடந்த 2010ம் ஆண்டு கோவை தமிழ் செம்மொழி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய கலைஞர் செம்மொழி மாநாட்டு இலச்சினையில், குமரி வள்ளுவர் சிலை, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறள் வரியுடன் சேர்த்து, சிந்துவெளி முத்திரையையும் பதிவிட்டார். சிவகளை ஆய்வு மூலம் ‘தண் பொருநை’ என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம், 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவியல் வழிப்பட்ட ஆய்வுகள் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிந்துவெளி நாகரிக ஆய்வின் மிகவும் முக்கிய பகுதி, அங்கு கிடைத்த எழுத்துகள் தான். இவை எதனைக் குறிக்கின்றன என்ற விவாதம் நீண்ட நாட்களாக நடந்து வருகின்றன. சிந்து சமவெளியில் மொத்தம் 400 முதல் 600 தனித்துவமிக்க எழுத்து வடிவங்கள் இருந்தாலும், சுமார் 50 எழுத்துகளே திரும்பத் திரும்ப பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக, ஒரு வரியில் ஐந்து முதல் 20 வார்த்தைகளே இருக்கின்றன. இந்த எழுத்துகளோ, சின்னங்களோ விருப்பப்படி பதிக்கப்படவில்லை. அவற்றில் ஒரு இலக்கண ஒழுங்கு இருந்தது.

செழித்து வளர்ந்த சிந்துவெளி பண்பாட்டின் எழுத்து முறையை இன்னும் நம்மால் தெளிவாக புரிந்து கொள்ள முடியவில்லை. நூறு ஆண்டுகளை கடந்தும் தீர்க்கப்படாத இந்த சிந்துவெளி புதிரை அறிய உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள், மொழியியல் தமிழ் அறிஞர்கள் மற்றும் கணினி வல்லுநர்கள் உட்பட பலரும் இன்றளவும் பெரும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள்.

சிந்துவெளி எழுத்துக்களை தெளிவாக புரிந்து கொள்ளும் வழிவகையை கண்டறியும் நபர்கள் அல்லது அமைப்புக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.8.5 கோடி) பரிசாக வழங்கப்படும் என சென்னையில் நடந்த சிந்துவெளி பண்பாட்டு கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த புதிருக்கான விடை கண்டறியப்படும் போது இந்திய துணைக்கண்டத்தின் வரலாற்றை தமிழை தவிர்த்து விட்டு இனி எழுத முடியாது என்ற முதல்வரின் குரலை நாமும் உரக்க சொல்வோம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் 14 வது வார்டுக்குட்பட்ட வடசேரி சுற்றியுள்ள பகுதிகளில் மாநகராட்சி அதிகாரிகளுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநகர நல அலுவலர் மருத்துவர் பிரபாகரன், நகர திட்டமிடல் அலுவலர் வேலாயுதம், மண்டலத் தலைவர் இ.ஜவகர், மாமன்ற உறுப்பினர் கலாராணி, மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் வடக்கு ஒன்றியம் சார்பில் வீராணம் ஊராட்சி பெரிய வீராணம் பகுதியில் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ரத்தினவேல் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், கழக பேச்சாளர் ஆலந்தூர் ஒப்பிலாமணி, கௌதமன், அகரம் ராஜேந்திரன், மகாலட்சுமி, ஆறுமுகம், செந்தில்குமார், ராஜா, பழனிவேல், சாமிநாதன், கோபால், வரத.ராஜ சேகரன், ரமேஷ், செல்வமணி, பாரதி ஜெயக்குமார், ராஜகோபால் லட்சுமண பெருமாள், ஜெயச்சந்திரன், உதயகுமார், செல்வராஜ், செல்வராணி, ஆறுமுகம், பாக்கியலட்சுமி, அசோகன், ஏ.டி.சி.ராஜேந்திரன், வெங்கடாசலம், கோபால், தயாநிதி, சரவணன், சிவகுமாரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.